ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௫. விபவஹூ ஆனிமீ பகுதி ௬.
Vol 5. *June & July 1928.* No. 6.

பாகவதாபசாரம்.

(78-ம் பக்கத்தொடர்ச்சி.)

(9) திரிசங்குவைப்போலே மார்பிலிட்ட யஜ்ஞோபவீதந்தானே

(9) ('திரிசங்குவைப்போலே மார்பிலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய் விடும்' என்ற) இவ்வாக்யம், இந்தப் பாகவதாபசாரத்திற்குப் பலம் தக்தபடம் (வெந்தவஸ்திரம்) போலத் தேகமுடியுமளவில் உருமாய்ந்து போதல் மாத்திரமல்லாமல் இவ்வபசாரம் பண்ணினபொழுதே கர்மசண்டாளனாய் விடுவான் என்பதற்குத் தக்கதோர்சான்றாக நின்றது. 'திரிசங்குவைப்போலே மார்பிலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய்விடும்' என்பது ஸ்ரீராமாயணத்திற் கண்ட வரலாறும். அஃதாவது:— இக்ஷ்வாகு வம்சத்திற்றோன்றினவனாகிய திரிசங்கு என்ற மஹாராஜன் சரீரத்தோடு ஸ்வர்க்கபோகத்தை அநுபவிக்க விரும்பித் தன் குலகுருவாகிய வஸிஷ்டமஹருஷியை அணுகி 'ஸ்வாமீ! யான் இந்தச் சரீரத்தோடு ஸ்வர்க்கலோகாநுபவஞ் செய்யும்படி ஓர் யாகமியற்றக்கடவீர்' என்று வேண்டிநின்றான். மஹருஷி 'நீ இப்பொழுதுரைத்தகார்யம் நம்மால் செய்யத்தக்கதன்றென்று மறுத்துவிட்டனர். அதன்பின் திரிசங்கு, தபஸ்ஸு செய்துகொண்டிருந்த வஸிஷ்டரின் புதல்வர்கள்பாற்சென்று தன் விருப்பத்தையுரைத்து 'நீங்கள் இப்பொழுதே இக்கார்யத்தை முடித்து வைப்பீர்களாக' என்று நிர்ப்பந்தித்தான். அவர்கள், மஹருஷியால் 'கூடாது' என்று மறுக்கப்பட்ட கார்யத்தை எங்களாற் செய்யப்போமோ? என்றுரைக்க, திரிசங்கு சினந்து அவர்களைநோக்கிக் 'குருவாகிய வஸிஷ்டர் மறுத்துரைத்ததோடு அவர் புதல்வர்களாகிய நீங்களும் 'மாட்டோம்' என்று தடுத்துரைத்தீர்கள்; இனி, என்கருத்திற்கிசைந்த ஓராசார்யனை நாடிவிரும்பிய கார்யத்தை

வாராய்விடும். (10) ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனுகைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை இவனுக்கு. ஆரூடபதிதனுகையாலே. (11) இது தனக்கு அதிகாரி நியமமில்லை.

முடித்துக்கொள்வேன். நீங்கள் சுகமாக வாழ்வீர்கள்' என்று வெறுத்துரைத்தான். அவர்கள் இம்மொழிகளைக் கேட்டவுடன் மிக்கக்கோபமுற்று இவன் நம்மை இகழ்ந்ததோடு நம்பிதாவையும் இகழ்ந்துரைத்தான்; இவனது செயலிருந்தவாறென்னே! என்று அவனைநோக்கி 'நீ நீசனுய்விடுவாய்' என்று சபித்தார்கள். அப்பொழுது ராஜதேஜஸோடுகூடிய அவனுடைய முகம் கருகி மார்பிலணிந்துள்ள யஜ்ஞோபவீதமும் வாராய்விட நீசனுய் நின்றான். இவ்வாலாற்றால் பாகவதாபசாரத்திற்கு இம்மைப்பயனுரைக்கப்பட்டது. முன்பு 'தக்தபடம்போலே' என்றுகாட்டிய திருஷ்டாந்தம் மறுமைப்பயனை நோக்கியதாம்.

(10) ('ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனுகைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை இவனுக்கு.' என்ற) இவ்வாக்யம், ஜாதிசண்டாளனைக்காட்டிலும் கர்மசண்டாளன் இழிந்தவனுவானென்பதை உணர்த்துகின்றது. ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனுகைக்கு யோக்யதையுண்டு என்பது பிறப்பினுல் சண்டாளனுனவனுக்கு அந்த ஜன்மத்திலேனும், ஜன்மாந்தரத்திலேனும் பகவத்கடாக்ஷத்தாலே நாமரூபங்களையுடையவனுய், பகவத்ஸம்பந்தத்தால் குறிப்பிட்டுரைக்கத்தக்கவனுயிருக்கிற பாகவதனுகைக்கு யோக்யதையுண்டு என்றவாறு. இவனுக்கு அதுவுமில்லை என்பது பாகவதாபசாரமாகிய கர்மத்தாலே சண்டாளனுனவனுக்கு எவ்வகையினுலும் பாகவதனுகைக்கு வழியில்லை என்றவாறு. பாகவதவிஷயத்தில் நிந்தை செய்யுமவர்கள் எவராயினும் அவருக்குச் சண்டாளத்வமுண்டாமென்ற குறிப்பு இதனுல் பெறப்படும். ஆரூடபதிதனுகையாலே என்பது பாகவதத்வமாகிய உயர்ந்த நிலையெய்தி "வஷ்கொடி ஶமெ த நாவி நக்ஷாமி" (அநேக புஷ்பங்களால் அர்ச்சித்தாலும் பொறுக்கமாட்டேன்) என்னும்படி அதிக்ரூரமான பகவந்நிக்ரஹத்திற்குக் காரணமான பாகவதாபசாரமாகிய பெருங்காற்றுத்தள்ள மறுபடியும் சம்சாரமாகிய படுகுழியில் விழுந்து விமோசன மற்றவனுகையாலே என்றவாறு.

(11) ('இது தனக்கு அதிகாரி நியமமில்லை.' என்ற) இவ்வாக்யம், ஜன்மத்தினுலும்ஜ்ஞானத்தினுலும் இழிந்தவர்கள் அவற்றால்உயர்ந்தவர்களிடத்தில் விரோதத்தைச் செய்வதுதான் அபசாரமாகும்; ஜன்மத்தினுலும் ஜ்ஞானமுதலியவற்றாலும் உயர்ந்தவர்கள் அவற்றால் தாழ்ந்தவரிடத்தில் விரோதத்தைச் செய்தால் அபசாரமாகாது; என்ற நியமமில்லை என்பதை உணர்த்து

(12) "தமர்களில்தலைவராயசாதியந்தணர்களேனும்" என்கையாலே.
(13) இவ்விடத்திலே வைநதேயவிருத்தாந்தத்தையும், பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்தவார்த்தையையும் ஸ்மரிப்பது.

கின்றது. இது தனக்கு அதிகாரி நியமமில்லை என்பது திரிசங்கு விருத்தாந்தத்திற் கண்டபடி உயர்ந்தவனிடத்தில் இழிந்தவன்செய்யும் விரோதந்தான் அபசாரமாம் என்ற நியமமில்லை என்றவாறு.

(12) ("தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேனும்" என்ற) இது, முன்னுரைக்கப்பட்ட அதிகாரி நியமாபாவத்திற்கேற்ற ப்ரமாணவாக்யமாக நின்றது. இது, தத்வத்தை உள்ளவாறறிந்தவராகிய ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வாரால் அருளிச்செய்யப் பெற்றதாம். அது வருமாறு:—

"அமரவோரங்கமாறும்வேதமோர்நான்குமோதித்
தமர்களில்தலைவராயசாதியந்தணர்களேனும்
நுமர்களைப்பழிப்பராகில்நொடிப்பதோராளவிலங்கே
அவர்கள்தாம்புலையர்போலும்அரங்கமாநகருளானே."

என்பதாம். இதன்பொருள்:—சிக்ஷா, வ்யாகரணம், சந்தம், நிருக்தம், கணிதம், கல்பம் என்று சொல்லப்படுகிற ஆறுவேதாங்கங்களையும், நான்குவேதங்களையும் நன்றாய் மனத்தில் தரித்து ஜ்ஞாநாநுகூலமான பகவத் விஷயத்தில் ஸம்பந்த முடையவரில் தலைவராகிய ப்ராஹ்மணராயிருந்தாலும் அவர்கள் ததீயர்களைப் பகவத்ப்ரபாவத்தையிட்டு மதியாமல் அவர்களின் ஜன்மமாத்திரத்தை நினைத்துத் தாழ்ந்தவர்களென்று புத்தி பண்ணுவார்களாகில் அவர்கள் அந்த க்ஷணத்திலே நீசராய்விடுவார் என்பதாம்.

(13) இவ்விடத்திலே வைநதேய விருத்தாந்தத்தையும், பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது; என்ற) இவ்வாக்யம், முன்னர் உரைக்கப்பட்ட விஷயத்தை நன்கு விளக்க வந்த ஐதிஹ்யங்களாம்; என்பதுணர நின்றது. இங்கு வைநதேய (கருட) விருத்தாந்தம், "இதுதான் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீதூது எழுந்தருளினபோது நாரதாதி மகருஷிகள் பலரும் வந்திருக்கிறவளவிலே கிருஷ்ணன் திருவுள்ளத்தைப் பின்செல்லுகைக்குறுப்பாகத் திருதராஷ்ட்ரனைக் குறித்துப் பல கதைகளும் சொல்லிவருகிற ப்ரகாணத்திலே ஸ்ரீநாரதபகவான் அநுக்ரஹித்ததாக உத்யோக பர்வத்திலே உக்தமாகையாலே, வேதாந்தோபப்ரும்மணவித்தமிறே" என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடி மஹாபாரதத்திற்கண்டதொன்றாம். அது வருமாறு:—

விசுவாமித்ரமஹருஷியின் சிஷ்யரான காலவரென்பர் விசுவாமித்திரருக்குப்பலகாலம் அன்போடு பணிவிடை செய்துவந்தார். பின்பு ஒருநாள்

விசுவாமித்திரர் காலவரை நோக்கி, 'காலவரே! நீர் நமக்கு இதுவரையிலும் உகந்து பணிவிடை செய்து வந்தீராதலால் மிகவும் களிப்படைந்தோம்; இனி நீர் உமக்கு இஷ்டமான இடத்திற்சென்று வாழ்வீராக' என்று கட்டளையிட்டார். அப்பொழுது காலவர், நாம் குருதக்ஷிணை கொடுக்காதொழிந்தால் நமக்கு இவ்வித்தைகள் நிலைநிற்கமாட்டாவன்றோ' என்று தமக்குட்கருதி விசுவாமித்திரரை நோக்கி, 'அடியேன் தேவரீருக்குத் தக்ஷிணையாக ஸமர்ப்பிக்கத்தக்க பொருள் இன்னது என்று கட்டளையிட்டால் அதின்படி செய்செய்கிறேன்' என்றனர். விசுவாமித்ரர், 'நீர் நமக்கொன்றுஞ் செய்யவேண்டா; நாம் உம்முடைய பணிவிடையினலும், பக்தியினலும் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்' என்றனர். காலவர், இச்சொல்லைக்கேட்ட வளவிலும் திருப்தியடையாமல் பன்முறையும் 'அடியேனிடத்தில் தக்ஷிணை பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று நிர்ப்பந்தித்தனர். அப்பொழுது விசுவாமித்திரர் சினங்கொண்டு காலவரைநோக்கி'உடம்பெங்கும் சந்திரமண்டலம்போலவெளுத்து ஒரு செவி பச்சையாயிருக்கும் எண்ணூறு குதிரைகள் நமக்குக்கொண்டு வந்து தாக்கடவீர்' என்றனர். இம்மொழிகளைக்கேட்ட காலவர் மிகவும் கவலையுற்று பலவாருக ஆராய்ந்து,'எல்லா அபேக்ஷிதங்களையும்செய்து தலைக்கட்டவல்லவனகிய ஸர்வேச்வரனை உபாஸிப்போம்' என்று முயன்றனர்.

அப்பொழுது இவருடைய சிநேகிதராகிய பெரிய திருவடி (கருடன்) அங்குவந்து தோன்றினர். காலவர் பெரியதிருவடியைப்பலவாருக ஸ்தோத்திரஞ்செய்து, 'நண்பரே! நீர் எனக்கு உயிர்த்துணைவராயும் மிகுந்த பராக்ரமமுடையவராயு மிருக்கின்றீராதலால் என் கார்யத்தைப் பூர்த்திசெய்துவைக்க வேண்டும்' என்று வேண்டினர். பெரியதிருவடி காலவர்மீது இரக்கங்கொண்டு, 'காலவரே! உமது இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவைக்கிறேன்; ஒன்றிற்கும் அஞ்சவேண்டா; உமதிஷ்டம் யாது?' என வினவினர். காலவர் தமது குறையைத் தெரிவித்தனர். பின்பு பெரியதிருவடி கிழக்குத்திசை முதலான நான்குதிசைகளின் விருத்தாந்தங்களை விரிவாக எடுத்துரைத்து, 'உம்மையான் எல்லாத்திசைகளுக்கும் எடுத்துச் செல்கிறேன்; நாம் இருவரும் அவ்வத்திசையில் விரும்பிய பொருளை ஆராய்ந்து பார்ப்போம்; வருவீர்' என்று காலவரைத் தம்சிறகில் ஒருபுறம் இடுக்கிக்கொண்டு முதலில் கீழ்த்திசையை நோக்கிச்செல்லலுற்றார். அப்பொழுது காலவர், பெரிய திருவடியைப் பார்த்து 'நீர் காற்றிலும் கடிதாய்ச் செல்கின்றீராதலால், என் கண்ணிற்கு ஒரே சுழற்சியாகத் தோன்றுகின்றதேயன்றிப் பிறிதொருபொருளும் தோன்றவில்லை; மேலும் பசியும் அதிகரிக்கின்றதாதலால் சிறிது மெதுவாகச் செல்லவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர். பின்னர் பெரியதிருவடி 'இதோ தோன்றுகின்ற மேல் சமுத்திரத்திலே ருஷபகிரி என்ற பர்வதத்தில் சிறிது தங்கி இளைப்பாறிச் செல்வோம்' என்று அங்குச்சென்றார்.

அங்கு ஜ்ஞாநாதிகையாயிருந்த சாண்டிலீ என்கிற பாகவதையைக்கண்டு வந்தனை வழிபாடுகளைச்செய்தார்கள். அவள் இவர்கள்மீது அன்புகொண்டு இவர்கட்கு விருந்தளிக்க இவர்களும் மகிழ்ச்சியோடு புஜித்துச்சிரமபரிகாரஞ் செய்துகொள்வதற்குக் கண்டுபலப்போகின்றசமயத்தில் பெரியதிருவடி 'இந்த ஜ்ஞாதிகையாகிய சாண்டிலீ என்கிற பாகவதை சிறந்த திவ்யதேசத்தில் வசிக்காமல் சாமான்யமான இவ்வூரில் வசிக்கின்றனளே; இனி இவளை நாம் ஓர் சிறந்த திவ்யதேசத்திற்கொண்டு சேர்க்கவேண்டும்' என்று கருதிக் கொண்டு கண்டயின்றார். பின்னர் ஒரு முஹூர்த்தகாலம் சென்றவுடன் அந்தப்பாகவதையிருந்த தேசத்தைக் குறைவாக நினைத்த இவ்வபசாரத்தால் பெரியதிருவடிக்குச் சிறகுகள் உதிர்ந்து ஒரு கார்யமும் செய்வதற்கு ஆற்ற லற்றவராய்விட்டனர். இந்நிலைமையைக்கண்ட காலவர், பெரியதிருவடியை நோக்கி 'இப்பொழுது நீர் உம்முடைய திருவுள்ளத்தில் நீங்கு நினைத்த துண்டோ? நீர் இக்குறைபாடுறுதற்குக் காரணம் யாது?' என்று கேட்டனர். பெரியதிருவடி, சாண்டிலீ என்ற பாகவதை விஷயத்தில் தாம் நினைத்ததைக் கூறினர். பின்னர் இவ்வபசாரத்தை அகற்றிக்கொள்ள பெரியதிருவடி சாண்டிலீயைத் தண்டனிட்டுநின்று 'அடியேன் செய்த அபசாரத்தைப் பொருத்தருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். சாண்டிலீயும் அநுக்ரஹிக்கப் பெரியதிருவடிநாயனர் முன்போலவே விளங்கினர். என்பதாம். ஆக இந்த வைநதேயவிருத்தாந்தத்தால் நித்யஸூரிகளில் தலைவராயும் ஜ்ஞாநாதிகளால் சிறந்தவராயுமிருக்கின்ற பெரியதிருவடி ஸ்திரீயாகையாலே ஜந்மாதிகளால் தாழ்ந்தவளாகிய சாண்டிலீ திறத்திற்செய்த மானசாபசாரத் திற்கு அப்பொழுதே பலம் விளைத்துப்பின் அவள் அநுக்ரஹத்தாலே நீங்கக் காண்கையாலே உயர்ந்தவர் இழிந்தவரிடத்திற்செய்கிற விரோதம் அபசாரமாகாதென்ற நியமமில்லை என்பது பெறப்படும்.

பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் அருளியவார்த்தை, நம்மாசார் யரின் ஸ்ரீஸூக்தியிற்கண்டதொன்றும். அதுவருமாறு:—ஜ்ஞாநாநுஷ்டானங் களாலும், உயர்குடிப்பிறப்பினாலும்சிறந்தவராகிய பிள்ளைப்பிள்ளையாழ்வான், கூரத்தாழ்வானை ஆசார்யனாகப்பற்றி அவர்பால் சகலார்த்தங்களையுங்கேட்டு வந்தனர். இவர், 'நாம் உயர்குடியிற் பிறந்துளோம்' என்ற அபிமானத்தினால் பாகவத விஷயத்தில் வணக்க முதலிய வழிபாடின்றி வாழ்ந்துவந்தார். இவரது நிலைமைகண்ட கூரத்தாழ்வான், 'அந்தோ! இவரிடத்திலுள்ள பாகவ தாபசாரமானது, இவரது சிறந்த ஜ்ஞாநாநுஷ்டானங்களையெல்லாம் கீழ்ப் படுத்தி விநாசத்தையும் விளைத்துவிடுமன்றோ! இனி, இவ்வபசாரம் இவரை விட்டகலுமாறுசெய்வதும் நமது கடமையாகும்' என்று திருவுள்ளம்பற்றினர். பின்பு ஒரு அயன தினத்தன்று ஆழ்வான் நீராடுவதற்கு எழுந்தருளியபோது பிள்ளைப்பிள்ளையாழ்வானும் அவருடன் எழுந்தருளினர். ஆழ்வான் நதியில் நியமாநுஷ்டானங்களையெல்லாம் முடித்துக்கொண்டு கரையேறியபோது

(14) ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே யமைகிறுப்போலே அவையுண்டானாலும்

பிள்ளைப்பிள்ளையாழ்வானை நோக்கி 'இன்று இந்நதிக்கரையில் எல்லோரும் தத்தமக்குரியதைத் தானஞ்செய்கின்றதைப்பார்த்தீரா? அதுபோல நீர் நமக்கு ஒரு தானஞ்செய்யமாட்டீரோ?' என வினவினர். அப்பொழுது பிள்ளைப்பிள்ளையாழ்வான் 'ஸ்வாமீ! தேவரீரை அடியேன் தஞ்சமாகப்பற்றிய அக்காலத்தே அடியேனுடைய ஆத்மா ஆத்மீயங்களெல்லாம் தேவரீருக்கு உரிமையாய் விட்டனவன்றோ! இப்பொழுது தேவரீருக்கு எதைத் தானஞ் செய்யப் போகிறேன்' என்றனர். நீர் இவ்வாறு கூறுவது முறையாயினும் இதுமாத்திரம் போராது; 'காரணத்திரயத்தாலும் பாகவதாபசாரம் செய்யாமல் வர்த்திக்கக்கடவேன்' என்று நம் கையில் உதகபூர்வகமாகத் தானஞ் செய்து தரவேண்டும்' என்றனர். அவரும் அவ்வாறே செய்து கொடுத்தார்.

பின்பு பிள்ளைப்பிள்ளையாழ்வான் பூர்வவாஸனையால் ஒரு பாகவததோஷத்தை நினைத்து மனம் பதைபதைத்து 'அந்தோ! இனி காரணத்ரயத்தாலும் பாகவதாபசாரம் செய்வதில்லையென்று தத்தம் செய்துகொடுத்த நமது செயலிருந்த வாறேன்னே! இனி நாம் வாழுமாறில்லை' என்று சோகமுற்றுத் தம் திருமாளிகையின் கதவைத் தாழிட்டுக் கண்டுயின்றார். பின்னர்க் கூரத்தாழ்வான், 'தினந்தோறும் தவறாது வந்து அர்த்தவிசேஷங்களைக் கேட்டுச் செல்கின்ற பிள்ளைப்பிள்ளையாழ்வான் இன்றுநெடுநேரமாகியும் வரவில்லையே காரணம் யாதோ?' என்று இவர் தம் திருமாளிகை வந்து சோகமுற்றுக்கிடக்கிற இவரைப்பார்த்து 'நீர் இவ்வாறிருப்பதற்குக் காரணம் யாது'? என்று கேட்டார். பிள்ளைப்பிள்ளையாழ்வான், 'அடியேன் இன்று மனத்தினால், ஒரு பாகவததோஷத்தை நினைத்து அபசாரப்பட்டேன்; இனிக் காரணத்திரயத்தினாலும் அபசாரம் புகாமல் இத்தேகத்தோடு வர்த்திப்பது அரிதாயிருக்கிறது; இத்தேகமாகியவிரோதி எப்பொழுது ஒழியுமோ?' என்று ஆழ்வான் திருவடிகளைப்பற்றிக்கொண்டு க்லேசித்தார். 'ஆழ்வான் இவருக்கு இத்தனை அநுதாபமுண்டாகப்பெற்றோமே' என்றுகந்தருளி அவரை நோக்கி 'மனத்தினால் நினைத்தற்கு அநுதாபமுண்டானால், ஈசுவரன் பொறுத்தருளுவான்; காயிகமாக ஒருவரையும் நலியக் கூடாது. இவ்விரண்டாலும் உண்டாகின்ற அபசாரம் இனி வாராதிருக்க அநுக்ரஹித்தனம்; வாயினால் யாதொரு அபசாரமுமுண்டாகாதிருக்குமாறு ஜாக்ரதையுடன் வர்த்திக்கக்கடவீர்' என்று அருளிச்செய்தார். இவ்விருத்தாந்தத்திற்கும் முன்னுரைக்கப்பட்ட வைநதேய விருத்தாந்தத்தின் கருத்துப்பொருளே பொருளாகக்கொள்வதன்றி, அறியாமையால் ஏற்படுகிற பாகவதாபசாரங்களுள் வாசிகாபசாரம் மிகவும் க்ரூரமாம் என்ற விசேஷப்பொருளுங் கொள்ளத்தக்கது.

(14) ('ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் ஸம்பந்தமே யமைகிறுப்போலே அவையுண்டானாலும் இழவுக்கு அவர்கள்

பக்கல் அபசாரமேபோரும்' என்ற)இவ்வாக்யம்; பேற்றுக்குச் சாதனமாகிய ஜ்ஞாநாநுஷ்டானங்கள் பூரணமாகவுடைய ஒருவனுக்குப் பாகவதாபசாரம் உண்டாயிற்ருகில், ஈசுவரன் அதை அற்பதண்டனையினுல் ஒழித்து அவனை அங்கீகரிக்கமாட்டானே? என்ற சங்கையை அநுவதித்து அதற்குச்சமாதான முணர்த்துகின்றது. ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் சம்பந்தமே அமைகிறுப்போலே என்றது மோக்ஷஸாதனங்களாகச் சாஸ்திரங்களிற் சொல்லப்படுகிற உண்மையறிவும், அதற்கிசைந்த ஒழுக்கமும் ஆகிய இவைகள் ஒருவனிடத்தில் இல்லாதொழிந்தாலும், ஜ்ஞாநாநுஷ்டானங்களை முற்றிலுமுடைய பாகவத சம்பந்தமே மோக்ஷத்திற்கு நிரபேக்ஷஸாதனமாகவிருந்து பலத்தைக்கொடுப்பதுபோல என்றவாறு.

"𑌪𑌶𑍁𑌰𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑌕𑍍𑌷𑍀 𑌵𑌾 𑌯𑍇 𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃।
𑌤𑍇𑌨𑍈𑌵 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍"

பசுர்மநுஷ்ய: பக்ஷீவா யேசவைஷ்ணவ ஸம்ச்ரயா:
தேநைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம்.

𑌯𑌂𑌯𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌿 𑌪𑌾𑌣𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌂𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾।
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌿𑌂𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾 𑌜𑌨𑌾𑌃॥

யம்யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம்யம்பச்யதி சக்ஷுஷா
ஸ்வதாரண்யபி முச்யந்தே கிம்புநர்பாந்தவா ஜநா:

இந்த இரண்டு சுலோகங்களால் பாகவதசம்பந்தத்தால் பேறு வித்திக்குமென்பதுரைக்கப்படுகிறது. இவற்றின் பொருள்களாவன:—சிறந்த வைபவத்தோடு கூடிய ஒரு வைஷ்ணவனுடைய ஸம்பந்தத்தால் மனுஷ்ய, திரியக், ஸ்தாவரங்களும் பரமபதமடைகின்றன. மேலும் அவ்வைஷ்ணவன் யாதொரு யாதொரு பதார்த்தத்தைத் தன்பார்வைக்கும்,தொடுதற்கும்விஷயமாக்குவனே, அவ்வஸ்துக்கள் ஜ்ஞாநாநுஷ்டானங்கட்கு யோக்யதையற்ற ஸ்தாவரங்களாயிருந்தாலும் அவைகள் ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகின்றன. அங்ஙனமிருக்க அந்தப் பாகவதனுடைய பந்துமித்ர களத்ராதிகள் ஈடேறுவார்களென்பது சொல்லாமலே கிடைக்குமன்றோ! என்பதாம். 'பசுமநுஷ்ய:' என்ற சுலோகத்தில் "சிறப்புடைப்பொருளை முற்படக்கிளத்தல்" என்ற விதிப்படி மனுஷ்யனை முற்கூறி அதன்பின் பசுபக்ஷிகளைக்கூற வேண்டிய முறையின்றிப் பசுபக்ஷிகட்கு இடையில் மனுஷ்யனைக்கூறியதினுல் பசுபக்ஷிகளின் வேறுபாடு தோன்ற மநுஷ்யனுக்குச் சிறந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் வேண்டியதில்லை; பசு முதலிய விலங்கினங்கட்குச் சமானமான கேவல பாரதந்த்ரயமே இவனுக்கிருந்தால் சாலும் என்ற பொருளறியக்கிடக்கிறது. 'ச' என்ற உம்மையால் மற்றப்புழு ஸ்தாவர முதலியவற்

இழவுக்கு அவர்கள்பக்கல் அபசாரமேபோரும். (15) இதில் ஜன்ம வ்ருத்தாதி நியமமில்லை. (16) இவ்வர்த்தம் கைசிகவிருத்தாந்தத்திலும், உபரிசரவஸு விருத்தாந்தத்திலும் காணலாம்.

றையும் கொள்க. 'தேனைவ' என்பதிலுள்ள ஏகாரம், சாஸ்திரங்களில் பேற்றுக்கு வியாஜசாதனமாகச்சொல்லப்பட்ட ஜ்ஞாநாநுஷ்டானங்களை நீக்குகின்றதினால் இது, பிறிதினியைபு நீக்கியது.

அவையுண்டானாலும் என்பது ஜ்ஞாநாநுஷ்டானங்கள் குறைவறவுண்டானாலும் என்றவாறு. இழவுக்கு அவர்கள் பக்கல் அபசாரமேபோரும் என்பது பகவத்விஷயத்தை இழந்துபோவதற்குப் பாகவதாபசாரமே நிரபேக்ஷ ஸாதனமாயிருக்கும் என்றவாறு.

(15) ('இதில் ஜந்மவ்ருத்தாதி நியமமில்லை' என்ற) இவ்வாக்யம், மேலே பேரிழவுக்குக் காரணமாகச் சொல்லப்பெற்ற பாகவதஸம்பந்தமும், அபசாரமுமாகிய இவைகட்கு அதிகாரி நியமமுண்டோ என்ற ஆசங்கையை அநுவதித்து அதற்குச் சமாதான முரைக்கிறது. இதில் என்பது பாகவத ஸம்பந்தமும், அபசாரமும் என்ற இரண்டையும் சுட்டி நின்றது. ஜன்ம வ்ருத்தாதி நியமமில்லை என்பது பிறப்பொழுக்கங்களால் உயர்ந்த பாகவதரோடுண்டான ஸம்பந்தமே பேற்றுக்குச் சாதனமாகும்; அவற்றால் இழிந்தவரோடுண்டான ஸம்பந்தம் பேற்றுக்குச் சாதனமாகாது; என்ற நியமமும், பிறப்பொழுக்கங்களால் உயர்ந்த பாகவதரிடத்திற் செய்த அபசாரமே இழவுக்குச்சாதனமாகும்; அவற்றால் இழிந்த பாகவதரிடத்திற்செய்த அபசாரம் இழவுக்குச் சாதனமாகாது; என்ற நியமமுமில்லை என்றவாறு. இதனால் பகவத் ஸம்பந்தமுடையார் எவரேனும் அவரது ஸம்பந்தமே பேற்றுக்குச்சாதனமாயும், அவர்திறத்திற் செய்யும் அபசாரமே இழவுக்குச் சாதனமாயுமிருக்குமென்பது போந்தபொருளாம்.

(16) ('இவ்வர்த்தம் கைசிகவிருத்தாந்தத்திலும், உபரிசரவஸு விருத்தாந்தத்திலும் காணலாம்' என்ற) இவ்வாக்யம், ஜந்மவ்ருத்தமினுக்கமற்ற பாகவத ஸம்பந்தத்தாலும் பேறு வித்திக்குமென்பதையும் ஜ்ஞாநாதிகளாற்சிறந்தவனுக்குப் பாகவதாபசார முண்டாகுமாகில் அது அநர்த்தத்தை விளைக்கும் என்பதையும் வ்ருத்தாந்தமுறையால் தெரிவிக்கிறது. இவ்வர்த்தம் என்பது 'இதில் ஜன்ம விருத்தாதி நியமமில்லை' என்பதைச் சுட்டி நின்றது. இங்குரைக்கப்பெற்ற இரண்டு விருத்தாந்தங்களுள் கைசிக விருத்தாந்தம் வருமாறு:—

சாககுலத்திற்றோன்றினவனாகிய ஸோமசர்மா என்ற ப்ராஹ்மணன் யாகஞ்செய்யத்தொடங்கி, அதைச் சாஸ்த்ர முறைப்படி நடத்தாதொழிந்ததோடு அந்த யாகம் முடிவுபெறுவதற்குமுன் உயிர் துறந்தனன், அதனால்

அவன் ப்ரஹ்மராக்ஷஸனாய்ப்பிறந்து திரிந்துகொண்டிருந்தனன். இஃதிங்ஙனமிருக்க; திருக்குறுங்குடி என்ற திவ்யதேசத்திற்குப் பக்கத்தில் ஸம்ஸாரபந்தத்தைக் கடக்கவேண்டும் என்ற விருப்புடையவரும் தண்ணியவர்ணத்தில் அவதரித்தவரும், நம்பாடுவார் என்ற காரணப்பெயரையுடையவருமான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் இருந்தார். அவர் உத்தானஏகாதசி யன்றிராத்திரி திருக்குறுங்குடி எம்பெருமானைப்பாடித் துதிப்பதற்கு வீணையை ஏந்திய கையினராய்ப் புறப்பட்டு வருகிறபொழுது, ஸோமசர்மா என்ற ப்ராஹ்மராக்ஷஸன் இவரைப்பிடித்துண்டு களிக்கவேண்டும் என்ற விருப்புற்று இவரைத் தடுத்தனன். அப்பொழுது இவர் 'யான் இன்று திருக்குறுங்குடிசென்று அவ்வெம்பெருமானை பண்ணினால் பாடிப் பரவிவிட்டு நானுனக்கு உணவாகிவிடுகிறேன்' என்று அந்த ப்ராஹ்மராக்ஷஸனுக்கு நம்பிக்கையுண்டாம்வண்ணம் பலவாறாகச்சபதம் செய்துகொடுத்துத் திருக்குறுங்குடியடைந்து கோயிலின் வெளிப்புற முன்றிலினின்று எம்பெருமானைக் கைசிகமென்ற பண்ணினால் பாடித்துதித்தித் தம்மனோபிஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, ப்ராஹ்மராக்ஷஸனையடைந்து 'என் சரீரத்தை புஜிப்பாய்' என்றனர். அவன் இவருடைய ஸத்யமொழி முதலிய வைபவத்தைக்கண்டு 'நீ இன்று பாடின பாட்டின் பலத்தைக்கொடுத்தால் நான் உன்னை உயிர்பெற்று வாழுமாறு செய்கிறேன்'என்றான். அதற்கு இவர் சம்மதிக்காதொழிய, அவன் முறையாக 'அர்த்தராத்திரியின் பண்ணின் பலனாவது அதிர்பாதியாவது ஏகயாமத்தின் பலனாவது தரல்வேண்டும்' என்று கேட்டான். இவர்,'நானதற்கிசையமாட்டேன்; நீ முன்சொன்னபடி என்னைப்பக்ஷிப்பாய்' என்றனர். அவன், 'நீ உன்கீதப்ரபாவத்தால் என்னை இப்பாவத்தினின்றும் கரையேற்றவேண்டும்' என்று சரணம் புகுந்தான். அப்பொழுது இவர் அவனிடத்தில் இரக்கமுற்றுத்தாம் பின்புபாடின கைசிகமாகிய பண்ணின் பலனைக்கொடுத்துக் கர்மதோஷத்தால் வந்த ராக்ஷஸ வேஷத்தை யகற்றி முன்போல ப்ராஹ்மணனாய், அதற்குமேலே பாகவதனுமாய் உஜ்ஜீவிக்கும்படி செய்தார்; என்பதாம்.

உபரிசரவஸு விருத்தாந்தம்:—இவன் ஓரரசனாவான். இவன், வித்யாதிகனாய் பாஞ்சராத்ரதர்மத்தில் நிலைநின்றவனாய் பகவதாராதன நிஷ்டனாய் தன்னுடைய தபோசக்தியால் தன் பரிவாரங்களோடு விமானமீதேறிக்கொண்டு ஆகாயசஞ்சாரியாய்த்திரிந்தனன். அப்பொழுது தேவர்களுக்கும், மஹருஷிகளுக்கும் யாக ஸம்பந்தமாக ஓர் விவாதமுண்டாயிருக்கிறவளவில் ஆகாயசஞ்சாரியாய்த் திரிகிற இவனைக்கண்டு 'இவனே நமது ஸம்சயத்தைத் தெளிவிக்க வல்லவன்' என்று இவன் பால் அணுகினின்றபொழுது உபரிசரவஸு இவர்களை நோக்கி உங்களுடைய அபிப்பிராயங்களைத்தெரிவிப்பீர்களாக; என்று வினவினான். அப்பொழுது மஹருஷிகள் 'அரசே! தான்

யங்களினாலே யாகஞ்செய்வதுதான் நலம் என்பது எங்களுடைய பக்ஷம்; பசுக்களாலே யாகஞ்செய்வதுதான் நலமென்பது தேவர்களுடைய பக்ஷம்; இவ்விருதிறத்தில் செய்யத்தக்கது எது? என்பதை எங்கட்கு எடுத்துரைக்க வேண்டும்' என்றனர். உபரிசரவஸு தேவர்களிடத்தில் பக்ஷபாதங்கொண்டு 'பசுக்களாலே யாகஞ்செய்வதுதான் நலம்' என்றுரைத்தனன். இதுகேட்ட மஹருஷிகள் கோபங்கொண்டு உபரிசரவஸுவை நோக்கி 'நீ இப்பொழுதுரைத்தது வேதஸூத்ரங்களுக்கு விரோதமாகில் உன்னுடைய ஆகாயசஞ்சாரமாறி ஆகாசத்தினின்றும் இப்பொழுதே பாதாளத்தில் விழக்கடவாய்; நாங்கள் விரோதஞ்சொன்னோமாகில் அப்படியே பாதாளத்தில் விழக்கடவோம்' என்று சபித்தார்கள். உடனே உபரிசரவஸு பாதாளத்தில் விழுந்தான்.

ஆக, இதுவரையும் பாகவதாபசாரத்திற்கும், பாகவதஸம்பந்தத்திற்கும் எடுத்துரைக்கப்பெற்ற திருஷ்டாந்த தார்ஷ்ட்டாந்தங்களையும் ஐதிஹ்யங்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றின் வேறுபாடுகள் இங்கெடுத்து விளக்கப்பெறுகின்றன.

"இது தனக்கு அதிகாரிநியமமில்லை" என்று குறிப்பிடப்பெற்ற பாகவதாபசாரம் ஸ்வரூபநாசமாம் என்னுமதுக்கு உயர்குடிப்பிறப்பு முதலிய ஓரதிகாரிநியமமில்லை என்னுமர்த்தத்தை, "தமர்களில் தலைவாராயசாதியந்தணர்களேனும்" என்ற பிரமாணத்தால் ஸாதித்து, பின்னர் இதை நிலைநிறுத்துவதற்காக வேநதேயவிருத்தாந்தமும், பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையும் என்ற இரண்டு ஐதிஹ்யங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், பாகவதாபசாரமே ஸ்வரூபநாசத்திற்கு நிரபேக்ஷ காரணமாகும் என்பதை "ஜ்ஞாநாநுஷ்டாநங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப்போலே அவையுண்டானாலும் இழவுக்கு அவர்கள் பக்கல் அபசாரமே போரும்" என்று திருஷ்டாந்த வாயிலாக வெளியிடலாயிற்று.

இங்ஙனம் திருஷ்டாந்த தார்ஷ்ட்டாந்தங்களால் எடுத்துரைக்கப்பெற்ற பாகவதசம்பந்தாபசாரங்களுடைய அதிகாரி நியமாபாவத்தை "இதில் ஜன்மவிருத்தாதிநியமமில்லை" என்ற வாக்யத்தால் எடுத்துரைத்துப் பின்பு பாகவதஸம்பந்தம் ஸ்வரூபோஜ்ஜீவனமாம் என்பதைக் கைசிகவிருத்தாந்தத்தாலும், பாகவதாபசாரம் ஸ்வரூபநாசமாம் என்பதை உபரிசரவஸுவிருத்தாந்தத்தாலும் விரித்துரைக்கலாயிற்று. இதுநிற்க;

முன்னர் "இது தனக்கு அதிகாரிநியமமில்லை" என்று பாகவதாபசாரத்தினுடைய ஜந்மவ்ருத்தாத்யதிகாரி நியமாபாவத்தை எடுத்துரைத்துப் பின்பும் அத்தனையேசுட்டி "இதில் ஜன்மவ்ருத்தாதி நியமமில்லை" என்றால் கூறியது கூறலென்னும் குற்றத்தின்பாற்படாதோவெனின்? இவ்வாறுரைக்கப்பெற்றதினால் பாகவதஸம்பந்தம் பகவல்லாபஸாதனமாமிடத்து உயர்குடிப்பிறப்பு முதலியவற்றையுடைய அதிகாரிநியமாபேக்ஷைகளில்லையோ அதுபோல பாகவதாபசாரம் ஸ்வரூபநாசமாமிடத்து இழிந்த ஜன்மாதிநியமமில்லை என்ற பொருள்கொள்ளக்கிடக்கிறதினால் கூறியது கூறலென்னும் குற்றத்தின் பாற்படாதென்க. மேலும் "இது தனக்கு அதிகாரிநியமமில்லை" என்பது காரணத்தில் நோக்குடையது. அஃதாவது:— இழிந்த குலத்திற்பிறந்த பாகவதவிஷயத்தில் விரோதத்தைச் செய்தால ஸ்வரூபநாசகாரணமாகிய பாகவதாபசாரமாகாது என்ற நியமமில்லை யென்பதாம். "இதில் ஜன்மவிருத்தாதி நியமமில்லை" என்பது கார்யத்தில் நோக்குடையது. அஃதாவது:— பிறப்பொழுக்கங்களால் சிறந்தாருடைய ஸம்பந்தத்தால்தான் ஸ்வரூபோஜ்ஜீவனமாகிய கார்யமுண்டாம் என்ற நியமமும், தண்ணியவர்ணத்திற்பிறந்த பாகவதவிஷயத்திற்செய்த அபசாரம்.கெடுதியை விளைவிக்காது என்ற நியமமும் இல்லை என்பதாம். ஆவே, இவ்விரண்டு வாக்யங்களும் வெவ்வேறு பொருளைக் குறிப்பிடுகிறதினால் கூறியது கூறலென்னும் குற்றம் யாண்டையது?

பாகவதாபசாரத்திற்கு அதிகாரிநியமமில்லை என்பதை முன்னரே வைநதேயவிருத்தாந்தத்தால் வலியுறுத்தப்பெற்றதால் இங்குப் பாகவதஸம்பந்த நியமாபாவத்திற்கு கைசிகவிருத்தாந்தத்தை மாத்திரமே எடுத்துரைக்கவேண்டிய முறையிருக்க, உபரிசரவஸுவிருத்தாந்தத்தையும் எடுத்துரைத்து எதற்காகவெனின்? வைநதேயரும், பிள்ளைப்பிள்ளையாழ்வானும் பகவல்லாபத்தைப் பெறுகையாலே 'பாகவதாபசாரத்தால் எம்பெருமானை இழந்தேபோவார்கள்' என்பதற்கு அவ்வைதிஹ்யங்கள் பிரமாணமாக மாட்டாமையாலே இழந்துபோன உபரிசரவஸுவிருத்தாந்தத்தைப் பாகவதாபசாரத்தினுடைய அதிகாரிநியமாபத்திற்குப் பிரமாணமாக எடுக்கலாயிற்றென்று அறியத்தக்கது.

ஸ்ரீ

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(63-ம் பக்கத்தொடர்ச்சி.)

வைஷ்ணவர்களுடைய பரஸ்பரவந்தன விஷயத்தில் வய:க்ரமத்தால் ந்யூநாதிக்யபாவம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டது.

இனி. உத்தமாசிரமிகளுக்கு க்ருஹஸ்தர்கள் வந்தநீயர்கள் அல்லர் என்று சிலஸம்ப்ரதாயஸ்தர்களும், உத்தமாசிரமிகளாயிருந்தபோதிலும் ப்ரஹ்மவித்துக்களாயிருக்கிற வைஷ்ணவர்கள் விஷயத்தில் ஆசிரமாதிக்கபுத்தியாலே வந்தனம் செய்யாமலிருப்பது அநுசிதமென்று சிலஸம்ப்ரதாயஸ்தர்களும் சொல்லுகிறார்கள்.

இவ்விரண்டு பக்ஷங்களுள் வந்தனம் செய்யக்கூடாது என்பதற்கு ப்ரமாணம். “த்ரயஏவயதே வந்த்யா:” “த்ரயஏவயதேர் வந்த்யா:” என்று தொடங்கி “பர்த்தா ஜ்யேஷ்டயதிர்ஹரி:” “மாதா வ்ருத்தயதிர் ஹரி:” என்று மாதாவும், தன்னைக்காட்டிலும் அதிக ஸங்கல்பத்தையுடைய ஸந்யாஸியும், ஈசுவரனும் வந்தநீயர்கள்; மற்றவர்கள் வந்தநீயர்களல்லர் என்றிருப்பதாலும், “ஸ்வதர்மஸ்தாந் யதீந் வ்ருத்தாந் தேவாம்ஶ்ச ப்ரணமேத்யதி:। நாந்யமாஶ்ரமிணம் கஞ்சித் ப்ரஶஸ்தமபி ஸந்நமேத்। ப்ரஹ்மவித்யாயுதமபி ந நமேதிதி நிஶ்சிதம்” “ஸ்வதர்மஸ்தாந் யதீந் வ்ருத்தாந் தேவாம்ச்ச ப்ரணமேத்யதி:, நாந்யமாச்ரமிணம் கஞ்சித் ப்ரசஸ்தமபி ஸந்நமேத், ப்ரஹ்மவித்யாயுதமபி நநமேத் இதிநி:சிதம்” என்கிற வசனத்தாலும் கிருஹஸ்தன் ப்ரஹ்மவித்தாயிருந்தபோதிலும் உத்தமாசிரமிகளுக்கு வந்தனீயனல்லனென்றேற்படுகிறது.

இந்த ப்ரமாணங்களைக்கொண்டு உத்தமாசிரமிகளுக்கு கிருஹஸ்தர்கள் ஒருபோதும் வந்தநீயர்களாகார் என்பது சிலஸம்ப்ரதாயஸ்தர்கள் அபிப்ராயம், இப்படியேற்படும் பக்ஷத்தில், யதிகளா

யிருந்த மூன்று திருநாமங்களும் க்ருஹஸ்தராயிருந்த கோபால தேசிகனிடத்தில் விசேஷார்த்தக் கிரஹணத்துக்காக அநேகாவர்த்தி தெண்டம் ஸமர்ப்பித்தார்கள் என்று அந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் சொல்லுகிறபடியால் க்ருஹஸ்தஸாமாந்யம் வந்தநீயமன்றென்று சொல்லுவதுகூடாது.

ஆனால் அந்தவசனம் ஆசார்யனல்லாத க்ருஹஸ்தவிஷயமென்று சொல்லும்பக்ஷத்தில், ஆசார்யபரமாசார்ய ஸமாகமத்தில் பரமாசார்யனே வந்தநீயனென்று ப்ரமாணமிருப்பதால், ஆசார்யபரமாசார்ய வ்யதிரிக்த விஷயமென்று அந்த வசனத்தைக் கொள்ளவேணும். அதுநிற்க,

"𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃" "ஆசார்யவதாசார்ய புத்ரேவ்ருத்தி:" என்கிற ப்ரமாணப்படி ஆசார்யபுத்ரனும் ஆசார்யவதநுவர்த்தநீயனாகிறபடியாலும், அப்படியே ஆசார்யதுல்யர்களான ப்ரஹ்மவித்துக்களும் அநுவர்த்தநீயராகிறபடியாலும் இவர்களைத் தவிர மற்ற க்ருஹஸ்தர்களே வந்தநீயர்களாகார் என்று கொள்ளக்கடவது.

மேலும், "𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑌣𑍍𑌡𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌦𑍍𑌭𑍁𑌵𑌿" "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத்புவி" என்கிற வசனப்படி வைஷ்ணவர்கள் பரஸ்பரம் வந்தநீயர்களாகையாலே வைஷ்ணவ க்ரஹஸ்தர்களும் வந்தநீயர்கள். ஆனால் 'வைஷ்ணவோ வைஷ்ணவம் திருஷ்ட்வா' என்கிற வசனமானது வைஷ்ணவயதி வ்யதிரிக்தவிஷயமென்று சொல்லுவதற்கு, "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌮𑌪𑌿" "ப்ரஹ்மநிஷ்டம் ப்ரசஸ்தமபி" என்கிற வசனம் பிரமாணமாகக் கொள்ளவேணும். அப்படிக்கொள்ளில், ப்ரஹ்மநிஷ்டசப்தமும் ப்ரசஸ்தசப்தமும் அவைஷ்ணவ க்ருஹஸ்த ஸாதாரணமாகையாலும், 'வைஷ்ணவ:' என்பது வைஷ்ணவ க்ருஹஸ்த விசேஷவிஷயமாகையாலும் சாமாந்ய வசனத்தைக் கொண்டு விசேஷவசனத்தை பாதிப்பது சாமாந்யவிசேஷந்யாய விருத்தம்.

மேலும், "𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌯𑌃 𑌨𑌮𑍇𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌂" "ஆச்ரமாதிக்யபு[illegible]ய: நமேத் ப்ரஹ்மவாதிநம்" என்கிற

விசேஷவசனமிருப்பதால் 'வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா' என்கிற இடத்தில் வைஷ்ணவசப்தம் யதிவ்யதிரிக்த வைஷ்ணவபரம் என்று சொல்லுவது அநுபபந்நம்.

வந்தனத்துக்கு ப்ரயோஜகம் யதித்வம் மாத்ரமென்று சொல்லும்பக்ஷத்தில் அவைஷ்ணவயதிகளும் வந்தநீயர்களாகவேணும். அவர்களும் வந்தநீயரென்று சொல்லுமது, "அவைஷ்ணவ நமஸ்காராத் ஸத்ய:பததி" "அவைஷ்ணவ நமஸ்காராத் ஸத்ய:பததி" என்கிற வசனப்படி அநுபபந்நம்.

இப்படி வைஷ்ணவர்கள் பரஸ்பரம் வந்தநீயர்கள் என்று சொல்லும்பக்ஷத்தில் அவரவர்ணஜரான வைஷ்ணவர்களும் வந்தநீயர்களாக ப்ரஸங்கியாதோவென்னில் "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்றும், "ஹரிப்ரஷ்டிவியாஹ்ருஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்" "பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யபம்" என்கிற ப்ரமாணப்படிக்கும், 'பழுதிலாவொழுகலாற்று' என்கிற பாசுரப்படிக்கும் அபகர்ஷப்ரயோஜகமான பகவந்நிக்ரஹ ஸங்கல்பம் பகவதநுக்ரஹ விசேஷத்தாலே நஷ்டமாகிறபடியால் அவர்களும் வந்தநீயர்கள்தான்.

இந்த விஷயம் ஆழ்வார் விஷயத்தில் ப்ராஹ்மணோத்தமரான மதுரகவிகளின் அநுவர்த்தநத்தாலும், திருமழிசைப்பிரானுக்குப் பெரும்புலியூர்ஸ்வாமிகள் யாகத்தில் அக்ரபூஜை கொடுத்தமையாலும், திருப்பாணாழ்வாரை லோகஸாரங்கமஹாமுநிகள் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய்ப் பெரியபெருமாள் ஸந்நிதியிற் சேர்ப்பிக்கையாலும் அதிசயித ப்ரபாவர்களான ஜ்ஞானிகள் விஷயத்தில் வந்தனம் கூடும்.

அதைக்கொண்டு அவரவர்ணஜர்களான ஆதுனிகபாகவதர்களும் ஏன் வந்தநீயர்களாகக் கூடாதென்று கேட்கும்பக்ஷத்தில் அந்த அதிகாரிகளைப்போல் ஜ்ஞானபக்தி பூர்த்தியும், அஹங்கார நிவ்ருத்தியும் இல்லாமையாலும் அதற்கு ப்ரஸக்தியில்லை. அப்படி

அதிகாரபூர்த்தியிருக்கும் பக்ஷத்தில் அவர்களும் வந்தநீயர்கள்தான். இந்த விஷயம் கீழ் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இனி, ப்ரக்ருத விஷயம் நிரூபிக்கலாகும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ வித்வத் ஸபை.

சபையின் நோக்கம்.

நம்முன்னோர்கள் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தைப்பற்றியும் ஸ்ரீவைஷ்ணவதர்மத்தைப்பற்றியும் பல கிரந்தங்கள் இயற்றியிருக்கிறார்கள். நம் பூர்வாசார்யர்கள் பரமதவாதிகளோடு சாஸ்த்ரார்த்தங்கள் செய்தும், பரமத கிரந்தங்களை யுக்திபூர்வகமாகவும் ப்ரமாணங்களுக்குப் பொருந்திய வழியிலும் கண்டனங்கள் செய்தும் நம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். ஆனால் இக்காலத்தில் சாஸ்திரீயமான வழியில் புறமதஸ்தர்களோடு வாதம்செய்வதும், புறமதஸ்தர்கள் நமது ஸித்தாந்தத்தை தூஷித்து எழுதும் க்ரந்தங்களைக்கண்டித்து கிரந்தங்கள் எழுதுவதும் அடியோடு நின்றுவிட்டன. ஸ்ரீவைஷ்ணவவித்வான்களுள் இந்த சக்தியே மிகவும் குறைவாகக்காணப்படுகிறது. ஆகவே மழுங்கிக்கிடக்கும் இந்த சக்தியை மறுபடியும் தலையெடுக்கும்படி செய்து, வாதகோஷ்டிகளில் கோடிக்ரமங்கள் சொல்லவும், கிரந்தங்கள் எழுதவும் பிரவர்த்திக்கும்படி அவர்களுக்கு உத்ஸாஹ மூட்டுவது அவசியமாயிருக்கிறது. இதுவே இந்த சபையின் நோக்கமாகும்.

சபையின் கார்யக்ரமம்.

ஸ்ரீவைஷ்ணவவித்வான்களை ஒன்றுகூட்டி வாதகோஷ்டிகள் நடத்தி, தமது ஸாமர்த்தியத்தை வெளியிடும் வித்வான்களுக்கு ஸம்மானங்களும் பதவிகளும் அளிக்கப்படும். குறிப்பிட்ட விஷயத்தை யெடுத்துக்கொண்டு கிரந்தங்கள் எழுதிக்கொண்டு வரும்

வித்வான்களுக்கு அவர்களுடைய கிரந்தங்களைப் பரிசீலனை செய்து கிரந்தத்தின் யோக்யதையை அனுசரித்து ஸம்மானம் அளிக்கப்படும்.

சபையில் கலந்துகொள்ளக் கூடியவர்கள்.

வாதகோஷ்டிகளில் கலந்துகொண்டு, அத்வைதம், த்வைதம், சுத்தாத்வைதம், பேதாபேதவாதம் முதலிய விஷயங்களில் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபமாகக் கோடிகள் சொல்ல யோக்யதையுடையவர்களே இந்த சபைக்கு முக்கியமாக அழைக்கப்படுவார்கள். இந்த யோக்யதை யில்லாதவர்களும் சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்க வரலாம்.

காலமும் இடமும்.

இந்த விபவவருஷம் ஆடிமாதம் 26-தேதி வெள்ளிக்கிழமை, 1928ஞ ஆகஸ்டுமீ 10உ முதல் 6-நாட்கள் பெருமாள்கோயிலில் முதலாவதாக இந்த வித்வத்ஸபை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அழைப்புக்கடிதம்.

நமக்குத் தெரிந்த ஸ்ரீவைஷ்ணவவித்வான்களுக்கு அழைப்புக் கடிதங்கள் முன்னடியே அனுப்பப்படும். அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்கள் ஸபையில் கலந்துகொள்ள அபேக்ஷித்தால் நமக்கு 10-நாட்கள் முந்தியே தெரிவித்துக்கொண்டால் அவர்களுக்கும் அழைப்புக் கடிதம் அனுப்பப்படும்.

நமது வேண்டுகோள்.

இந்த விளம்பரத்தைப்பார்க்கும் ஒவ்வொருவரும் தமது கிராமத்திலும் ஸமீப கிராமங்களிலும் உள்ள வித்வான்களின் விலாஸத்தை நமக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிரவும் மேற்கண்ட சபையின் நோக்கத்தில் அபிமானமுள்ளவர்கள் சபைக்கு வந்திருந்து நடப்பிக்கவேணுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம். வித்வத்ஸபை நடக்கும் தினங்களில் உபந்யாஸங்கள் நடக்கவும் ஏற்பாடு செய்யப்படும். வித்வத்ஸபையில் நேராகக் கலந்துகொள்ளக் கூடாதவர்களும் ஸம்ப்ரதாய விஷயமான உபந்யாஸங்களைக்கேட்டு லாபமடையலாம்.

இப்படிக்கு,

பிரதிவாதி பயங்கர மடம்
காஞ்சீபுரம்.

ஸ்வாமிகளின் ஏஜண்டு.